வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலே சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356


புத் - அகூ ]   யாழ்ப்பாணம்:- பிங்கள ஞூ புரட்டாதி மீ உக - உ   வெள்ளிக்கிழமை ( 7 - 10 - 1977 )   [ இல: உரு

# அரசியல் பேசினுல் மட்டும் ஆகாது!

## அற நெறியில் நின்று வழி அமைக்கவேண்டும்

## காந்திப் பெரியார் காட்டி நடத்திய காருண்யப் பாதை

ஆங்கில முறையிலே பத்தாம் மாதம் இரண்டாந் திகதி உலகோங்கும் அறப்புகழ் படைத்த மகாத்மாக் காந்தி உதித்த நன்னாள். அவ்வுத்தமர் இவ்வுலகை வாழ்வு நீத்தும் ஆண்டுகள் முப்பதாகின்றன. இருந்தும் இவ்வுலகம் என்ன நிலையில் இப்பொழுது அலைந்து போகின்றதென்பதைச் சற்று உற்றுப் பார்த்தால் உண்மையில் மக்கள் இன்னமும் காந்திமுறையை நன்றாகக் கணிக்கவில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது.



நாடாளு மன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ உறுப்பினராக நாடாத அரசியற் பெருந்தலைவர் உலகில் ஒரே ஒருவர்தான். ஆகையினால் அந்த அற்புத மனிதனின் தலைமையும் ஒரு தனி நெறியே. பாரத நாட்டு விடுதலை வீரர் தம் முதல்வனுய்த் தொண்டாற்றிய காந்திப் பெரியார் ஏன் பாராளுமன்றத்திலிருந்து சேவை செய்ய எண்ணவில்லை என்பதை இப்போதுள்ள அரசியல்வாதிகள் சிந்திப்பது மிகவும் அவசியம்.

அரசியல் என்றதும் ஊர் மன்றத்திலோ மாவட்ட சபையிலோ பாராளுமன்றத்திலோ ஒரு உறுப்பினராக வருவதையே இலட்சியமாகக் கொள்வது சகசமாய்விட்டது, ஆகவே உண்மைத் தொண்டு என்றால் உத்தமர் காந்தி நிகழ்த்தியதென்ற கருத்தை மக்களும் முக்கியமாக அரசியலில் ஈடுபடுவோரும் அறிய வேண்டியது விரும்பத் தக்கது.

காந்தி அறிஞர் முன்னோர் கருத்தை எந்நாளும் முன்வைத்துச் சொன்னார்; செயலில் நின்றார்.

அறஞ்செய விரும்பினர்; ஆறுவது சினமென்று தேறினர்; அவனன்றி ஓரணுவும் அசையாதென்று தானென்ற எண்ணத்தைத் தவிர்த்தார்.

கொல்லாமை அதன்பின் பொய்யாமை என்ற வள்ளுவர் வாக்கோடமையாது அகிம்சையும் வாய்மையும் ஒருங்கே அதி உத்தமமானவையென்றுணர்ந்தார்: உரையாற்றினர். உற்றவாறு செயற்பட்டார்.

சிந்தையும் சொல்லும் செயலும் எந்தவகையிலும் மாசுபடாது சுத்தமாய் நின்று தொண்டாற்றிய காந்தி அண்ணலை எண்ணினாலே போதும் அரசியல் நற்சிந்தனை உதிப்பதற்கு.

"புலாலுண்ணுன் போதைப் பொருளறியான் பொய்யோ
இலானென்றும், அன்பே இதயத் — துலாவுமுயர்
சீலன் கொல் லாவிரதச் செம்மலாம் காந்தி நற்
சீல முலகுக்கோர் சீர்".

## "தோழமை பூண்டு மண்மேல் வாழியென" வாழ்த்துப் பெற்ற தம்பிரான் தோழர்

புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயிலில் அட்டாங்க பஞ்சாங்கமாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் முறைமையினால் வணங்கினர் என்று சேக்கிழார் அடிகள் சொல்லக் கேட்டோமல்லவா? முறைமையாய் வணங்கும் பேறு எவருக்கும் இலேசாக அமையாது என்ற பொருள் இங்கே தொனிப்பது காண்க.

ஆறுமுகநாவலர் ஐயா வணங்கும்முறையை விளக்கும் பொழுது அட்டாங்கம் பஞ்சாங்கம் என்பனவற்றை விரித்துரைத்து வணக்கம் எவ்வாறமைதல் வேண்டும் அவயவங்கள் எவ்வகையில் நிலந்தோய்ந்து படியவேண்டும் என்றெல்லாம் எமக்கறிவூட்டியிருக்கவும் இக்காலத்தில மணமீது விழுந்து கும்பிடுவாரைக் காணப்தரிதாகின்றது. சிலர் ஓரளவில் இருகரங்களைமட்டும் கூப்புவர், சிரமேற்கூப்புவர் சிலரினும் சிலர். பஞ்சாங்க நமஸ்காரம் செய்வோர் சிறிதளவுண்டு. அட்டாங்க வணக்கம் அரிது. இந்தவிபரீதத்தைத்தான் சமயசீர்திருத்தம் என்றுசொல்லி மகிழ்கின்றனர். பெயரளவில் மட்டும் சைவ மக்களாக இருப்பது போதும் என்பதே இவர்கள் எண்ணம் போலும்,

சமயம் வளர்த்த நால்வர்களைக் குரவர்கள் என்று பெரியோர் அழைத்தமை உண்மை நெறியே உலகில் வாழ்ந்து காட்டியமையாலன்றோ.

திருவாரூரிலே ஒரு தெய்வீக நாடகம் நடந்தது.

[ வளர்ச்சி 2-ம் பக்கம் ]

## அரசியல் அமைப்புத் திருத்தம் பேரவையில் அங்கீகரிக்கப்பட்டது

### ஆனல் த, வி, கூ. விவாதிக்கவுமில்லை வாக்களிக்கவுமில்லை

இலங்கைக்கு மக்களால் தெரிவுசெய்யப்படும் சனுதிபதிக்கு இடமளிக்கும் இத்திருத்தத்தில் அச்சனுதிபதி ஆட்சி அதிகாரம் யாவும் உள்ளவராகவும் அமைச்சரவைத் தலைவராகக் கலந்து கொள்ளவும் தத்துவமுடையராவர். இறைமை தேசிய அரசுப் பேரவையிலும் சனுதிபதியிலும் அமையும் என்பதும் ஓர் திருத்த அம்சம். முதலாவது சனுதிபதி தற்போதைய பிரதமரே என்பதுவும் இன்னெரு அம்சம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் 127 உறுப்பினர்களும் நுவரேலியா - மஸ்கேலிய 3-ம் உறுப்பினர் திரு. சௌ. தொண்டைமானும் மட்டும் வாக்களித்தனர், எல்லோரும் சாதகமாக.

எதிராக வாக்களிக்க எதிர்க்கட்சியிலிருந்து எவரேனும் அவையில் அவ்வமையம் இருக்கவில்லை.

த. வி. கூ. தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விவாதத்தின் முன்பு அவையில் ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். அதில் தமிழ் இனம் இப்பொழுது அடைந்திருக்கும் அவல நிலையில் அரசியல் அமைப்பு விவாதத்திலே கலந்து கொள்வது முடியாத காரியமென

வளர்ச்சி 2- ஆம் பக்கம்

## நூல் வெளியீட்டு விழா

ஏழாலையில் ஏழு ஆலயங்களின் முன்றிலில் இவ்விழா 9-10-77 ஞாயிறு மாலை 4 மணிக்கு திரு. சு. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நிகழும். 'ஏழாலை' என்னும் இந்நூல் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களால் எழுதப்பட்டது.

## யாழ் வளாகத்தின் முதற் பட்டதாரி

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்தைச் சேர்ந்த செல்வி தமிழரசி சந்திரசேகரம் அவர்கள் இந்து நாகரிகத் துறையில் விசேடபட்டப்பரீட்சையில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தினர். இச்சித்தியினைப்பெற்றதன் மூலம் யாழ் வளாகத்தின் முதற்பட்டதாரியென்னும் பெருமையையும் இப்பெண்மணியே கைக்கொண்டுள்ளார். ....

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிங்கள ஹூ புரட்டாதி மீ உக-உ வெள்ளி

## பணயம் வைப்பிக்கும் பயங்கரவாதம்

உலக மக்களைக் கலக்கி வைக்கும் பலவித பகைஞரிலும் இப்பொழுது புதிதாகப் புறப்பட்டுக் கங்கணங் கட்டி நிற்கும் பயங்கரவாதிகளே படுமோசமானவர்கள். இந்த மாபாவிகள் முதலில் ஒருவராய் இருவராய் இப்பொழுது எத் தேசத்திலும் எத் தொகையிலும் காணப்படுகின்றனர். இவர்கள் நிலத்திலும் நீலக் கடலிலும் நீள் விசம்பிலும் அரசு புரியத் தொடங்கி விட்டனர்.

பயங்கர ஆயுதங்களைப் படைக்கலமாகக்கொண்டு ஒன்றுமறியாத பொதுமக்கள் உலாவுகின்ற பயணப் பாதைகளிலே திடீரெனத் தோற்றித் திடுதிடுக்க வைக்கும் அரக்க இயக்கம் பலம்படைத்த வல்லரசுகளைச் பணயத்துடன் பணிய வைக்கின்றனரென்றால் இனிப் பாதுகாப்பென்ற உதவி பொதுமக்களுக்கிருக்கமாட்டாதுபோலும்!

சென்ற சில நாட்களாகச் செஞ்சேனை என்ற வர்ணிக்கப்பட்ட நஞ்சனைய நாசகாரிகள் நூற்றுக்கு மேற்பட்ட விமானப் பிரயாணிகளை நாட்கணக்காக நாடியோட்டம் இன்றி நடுநடுங்க வைத்ததுமன்றி யப்பானிய அரசையே கேட்டதெல்லாம் காணிக்கையாகக் கொடுக்கச் செய்த நாடகம் மனித வர்க்கத்துக்கு அழியா மானக் கேட்டை விளைவித்திருக்கின்றதென்பதை மனிதாபிமானம் பேசும் உலக நாடுகள் அமைந்த கழகங்கள் இன்னும் உணரவில்லைபோலும்!

உலக யுத்தங்கள் உண்டானபொழுதெல்லாம் ஐக்கிய நாடுகள் மனித உரிமையைக் காக்கவே போர் புரிந்ததாகப் புகன்றனர். பெற்ற வெற்றியில் இறும்பூதெய்தினர். அந்த வல்லரசுகள் இந்தவித உலக பயத்தை மூலையிலேயே அகற்ற முற்பட முடியாதா? ஒரு நாடு குற்றஞ் செய்தவர்களைத் தண்டித்துக் கைது செய்யும் உரிமையையும் இழப்பதோடு பெருந் தொகைப் பணத்தையும் பணயமாகக் கொடுத்தது என்றால் என்னே இந்த விபரீதம்!

முற் காலத்திலே போக்கிரித் தனமானவர்கள் தங்கள் புய பலத்தைக் காட்டி வியாபாரிகளிடம் பணங் கேட்பதுண்டு இந்தப் பணத்தைக் 'கப்பம்' என்று சொல்லுவார்கள். பயந்தவர்கள், இத்தகையவர்களைப் வளர்த்து வந்தார்கள். துணிவுள்ளவர்கள் துரத்திவிடுவார்கள். பாடிகாவலரும் இவ்விதமாக அச்சுறுத்துவோருக்குத் தக்க பாடமும் படிப்பிப்பார்கள். ஆவ்வாறுமய நிகழ்ச்சிகள் மிகச்சிலவே. விளையும் நட்டமும் சிறுத்த.

ஆனல் இப்பொழுது நடமாடும் கடத்தல்காரரின் தொல்லையும் அதனல் விளையும் பயங்கரசேதமும் எல்லோரையுமே பாதிக்கும். எனவே ஐக்கிய நாடுகள் கூடி ஆண்டுக்காண்டு அரசியல் சமுகவியல வேதாந்தம் பேசி வீண்பொழுது கழிப்பதிலும் பார்க்க உலகப்பாதுகாப்பு இயக்கத்தை உண்டுபண்ணிக் கடத்தல் என்ற கொடுமையை முற்றாக அகற்ற முன்வருதல்தான் அவர்கள் மனித வர்க்கத்துக்குச் செய்யக்கூடிய ஒரே ஒரு உதவி.

## அரசியல் அமைப்புத் திருத்தம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

றும் பயனளிக்கப்போவதில்லை என்றும் எடுத்துக் காட்டினர்.

சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி; சிறிமாவோ பண்டாரநாயக அரசியல் அமைப்புத் திட்டம் [illegible] தானதென்று கூறினர். வாக்கெடுக்கும் வேளையில் இக் கட்சியினர் வெளியேறிவிட்டனர்.

## நாடுஎன்பதுசொல்லளவில்மட்டுமா!

### நல்லமைப்பை நாம் நாடவேண்டாமா?

பழந் தமிழ் இலக்கியங்களும் சைவ நூல்களும் எல்லாக் காலத்துக்கும் ஏற்ற உண்மைகளையே எடுத்துக் கூறுகின்றன. இவற்றுள் ஒன்று திருக்குறள். இவ்வரிய நூலின்கண் இம்மைக்கும் மறுமைக்குமுரிய நெறிகள் யாவும் இருக்கின்றன.

நாடு என்பது என்ன. அதன் இலக்கணம் யாது? என்று அறத்துப் பாலின் பின் பொருட்பாலில் வள்ளுவனுர் விரித்துரைத்திருப்பதை இக் கால அரசியல் அறிஞர்கள் நன்ருகக் கற்றுக் கருத்திலே உற்றுணருதல் நன்மை தரும்.

திருக்குறளிலே திகழும் நாட்டிலக்கணத்தை இங்கு எடுத்தாராய்வாம்,

பல வளங்கள் நிலவுவதாலேயே நாடு அமையும் என்ற கருத்திலே

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு

என்பது முதலாவது விளக்கம். பயிர் விளைவிப்போரும் பண்புடையோரும் பாங்காயமைந்த செல்வமுடையோரும் ஒருங்கு சேர ஓங்கும் நாடு என்று முன்னுரை வரைந்த வள்ளுவர் பெருந்தகை மேலும்

பெரும் பொருளாற் பெட்டக்கதாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு

என அதன் விளைவை எடுத்தாளுகின்றார்.

பெரும்பொருளும் கேடின்மையும் ஒரு நாட்டை ஏனைய நாடுகள் விரும்ப வைக்கும்என்பது குறிப்பு. சகிப்பு என்னும் தன்மையும் வேண்டும் என்பார்

பொறையொருங்கு மேல்வருங்கால்
தாங்கி இறைவற்
கிறையொருங்கு நேர்வதுநாடு

என்று பிற நாடுகளாற் பாரம் போறுக்குமென்னும் அவற்றைத் தாங்கித் தன் கடமையையும் தளராது இயற்றும் ஆற்றலை அறிவுறுத்துகின்ருர்.

நாட்டுக்குக் கேடு பட்டினியும் தீரா நோயும் வெம்பகையும்என்ற பொருளில இயைந்த குறள்

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.

முதற்கண் எவை சேர்ந்தால் நாடுதோன்றும்என்ற பொய்யா மொழி போல எவை சேராவிட்டால் நாடு இயலும் என்று கூறுகின்றது இக் குறள்.

தகாதன இவை என்பதை

"பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லதுநாடு"

என விளக்குவது காண்க.

மிகமிகப்பொருத்தமான கருத்துக்களடங்கிய இச் செய்யுளை விரித்துரை கொள்வது சாலும்.

பலவேறு குழுக்கள் இருப்பது பாதகமானமையும் எனபார் அவைதாம் எவற்ருல் உண்டாகின்றன என்றுணரப் பரிமேலழகர் உரை உதவுகின்றது. இனத்தால் மதத்தால் வேற்றுமைப்படும் [illegible] என் பொருள் [illegible] வது பொருந்தும் உட்பகையின்ற சொற்றொடர் ஆழ்ந்த பொழிப்புடையது. குறளை கூறுவார். கொள்ளைக்காரர் மற்றும் கொல் புலி முதலிய விலங்குகள் இவை யாவும் உள்ளிருந்து ஊறு விளைவிக்கும் பகையாம் இவற்றிலும் மேலாகக் கொல் குறும்பும் கூடாதென்ருர் குறநூலார் வேந்தன் என்பது ஆட்சியாளனைக் குறிக்கும் ஆகையால் முடி மன்னனையும் குடி மன்னனையும் காட்டுவதாகும். நாட்டாட்சியை ஆட்டி வைக்கும் கொலைத் தொழில் செய்யும குறும்பர் பொல்லா உட்பகைஞர் அன்ருே!

கெடுதல் இன்றியும் கெட்ட இடத்தும் குன்ருவளமுள்ளதாயும் நாடு இருத்தல் வேண்டுமென்று சொல்லிமேலும் நாவ்கோயில், ஏரி, ஆறு, மலை இவற்ருேடு பாதுகாப்பு அரணும் தேவையெனக்காட்டி நோயற்ற வாழ்வும் ஆக்கமும் தாணிடைப் பொலிவும் அரன் பூசை அடியார் விருந்தோம்பல் ஆகியவற்ருல் இன்பமும் காவலும் தக்க அணியாகும் என்ற குறிப்பிட்டு இத்தகைய இலக்கணம் எல்லாம் வாய்த்தும் ஆட்சிக்கு அமைவு இல்லையேல் நாடு எற்றுக்கு? என்றிரங்குகின்ருர் பொய்யா மொழிப்புலவர்.

ஆட்சிக்கு மக்கள் அன்பு காட்டலும் மக்களுக்கு ஆட்சி ஆவன செய்தலுமே நாட்டை நலம்பெறச் செய்யும் என்பது பெறப்படும்.

### சனுதிபதியின் பாரியார் காலமானுர்

நேற்றுமாலை திருமதி ஷிலா கோபலாவாவின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. சனுதிபதியின் பாரியாரான இவர் பொதுநல சேவை இயக்கங்ளிற் கலந்து தொண்டாற்றிப் பெரு மதிப்புப் பெற்றிருந்தார்.

### உணவுக் குறுதுணை

#### ஊறுகாய்

ஊறுகாயெல்லாம் உதராக்கினியை வளர்க்கும்; அருசியைப் போக்குர்; வாதபித்த சிலேஷ்மங்களைத் தொலைக்கும். ஆதலாலே, தயிர்ச்சாதத்தோடு மோர்ச் சாதத்தோடும் ஊறுகாய் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

x x x

இரவிலே தயிரும், மோரும், கீரைகளும், கிழங்குகளும், கனிகளும் உண்ணலாகாது. பகலிலே பால் உண்ணலாகாது. இரவில் உண்ணத்தக் கறிகளாவன துவரம் பருப்பு, அவரைப் பிஞ்சு, முருங்கைக்காய், முள்ளிககாய், தூதுளங்காய் என்பவைகளாம்.

பாலபாடம்,

## தோழமை பூண்டு....

1ம்- பக்கத்து வளர்ச்சி

இறைவனுக்கும் மெய்யடியார்களுக்கும் இடையில் இத்தகைய நாடகங்கள் நிகழ்ந்திருப்பதைப் புராணங்களிலே அறிகின்ருேமல்லவா. அத்தகையதொன்றே சுந்தரர் தோழமை பூண்ட நாடகம்,

அசரீரீ என்ற பதம் இந்தத் தெய்வீக நாடகங்களுக்குரியது. இறைவனும் திருத்தொண்டனும் தொலைபேசியிலேஒருவரோடொருவர் கலந்துரையாடுவது போன்ற நிகழ்ச்சியேயிது. அசரீரியில் எழும் தெய்வ வாக்குகளுக்கு நன்றியுரையாக நால்வர் திருமுறைகளை எமக்கு நயந்தருளினர்கள் என்றும் சொல்லலாம்.

நட்புக் கரங்கள் நீட்டிய திருவாரூர்நாதனர் " வேட்கைதீர வாழி மண் மேல் விளையாடுவாய் " என்று ஆரூரக்கு அன்பு மொழி வழங்கினர். அவதார புருடர்கள் மண்மேற் பிறப்பது இவ்வாறுகும் விளையாட்டுக்காகவே

எனவே பரவை திருமணமும் தெய்வீக நாடகத்தில் ஓர் அங்கமாம்.

திருவருள் கூடியதும் பரவையாரைக் கண்ணுேக்கிய தம்பிரான்தோழர் அத்தோற்றத்தை "அற்புதமோ சிவனருளோ" என்று அதிசயித்தார் என்ருல் அது இந்தத் தெய்வீக சந்திப்பின் திவ்வியக்கருத்தே,

இருபாலும் திருவருள் கூடியதாகப் பரவையாரும் தாங்கண்ட திருக் கோலத்தைச் "செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனின்" உருவமோ என்று நினைந்தார்,

### இந்து நாகரிக டிப்ளோமா முதலணி

அண்மையில் பல்கலைக் கழக யாழ். வளாகத்தினரால் நடாத்தப்பெற்ற இந்து நாகரிகத் துறையின் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்:

செல்வி G S அரசரத்தினம்
திருமதி M ஞானசம்பந்தன்
செல்வி S. கோபாலபிள்ளை
செல்வி L கனகசபாபதி
திருமதி S S குமாரசாமி
திரு. S. R குமரேசன்
செல்வி V. முத்தையா
திருமதி P நடேசன்
திரு M. பவானந்தன்
திரு. M. இராசரத்தினம்
திருமதி V. இரத்தினவேல்
செல்வி A சரோஜாதேவி
திரு T. செல்லத்துரை
செல்வி C சிற்றம்பலம்
செல்வி P. சொக்கலிங்கம்
செல்வி K. சுந்தாமூர்த்தி
திரு S. தேவதாசன்
திரு. M திருநாவுக்கரசு
திரு, V. உமாபதிசிவம்
செல்வி P விநாயகமூர்த்தி
திரு. S. விநாயகமூர்த்தி
திரு. T. சிவசம்பு
(சிவஞானசித்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசைகள்

சைவபரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கீழ்க்காணும் குருபூசைகள் குறிக்கப்பட்ட தினங்களில் சிவபூசையுடனும் நாவலர் பெரியபுராணவசனத்திலுள்ள குறித்த நாயன்மார்கள் சரித்திரம் படித்தல், திருத்தொண்டத் தொகை ஓதல் நடராசர் பூசை தமிழ் மறையோதல் ஆகிய நியமங்களுடனும் நடைபெற்றன.

25-9-77 — நரசிங்கமுனையரையர்
29-9-77 — உருத்திரபசுபதியார்
2-10-77 — திருநாளைப்போவார்

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான விளம்பரம்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

கரணவாய் வடக்கு, கரவெட்டி கந்தையா அம்பலவாணர் கைம்பெண் அன்னம்மா — வாதி

இல. ஈடு/13446 எதிராக

கரணவாய் வடக்கு
1. சின்னத்தம்பி பொன்னம்பலமும்
2. பெண் கமலாம்பிகையும் — பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின் படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1977 ம் ஞூ ஐப்பசி மாதம் 31 ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் (11) பதினொருமணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் நவிண்டியுதறிச்சி "தோலியோடை" இது பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 4603 இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்டதும் உலாந்தா மேஸ்தர் வே. சீவரத்தினம் என்பவரால் 1663 ம் இலக்கத்தில் அளந்து விந்தாரிக்கப்பட்டதுமான படத்தின்படி 11 ம் நம்பர் துண்டுக்கு நி.பர. 18 குளி 13, 20/32 இதுவும் 7 ம், 8 ம், 9 ம் துண்டுகளின் தெற்குக் கரையோரமாக ஆட்சியிலிருக்கும் குளி 16 இதுவும் நி. பர. 19 குளி 11, 20/32 இதில் மேற்குப்புறமாக நி. பர 6 எல்லை கிழக்கு வழிவாய்க்காலும் வல்லிபுரம் முத்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனமும். வடக்கு கதிரவேலு பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம் மேற்கு சின்னத்தம்பி பெண் அன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம் பெண் மகேஸ்வரிக்குடைய வாதனம். இதடங்கலும், குறித்த படத்தில் 12 ம், 15 ம் துண்டாகிய ஒழுங்கையிலும் 13 ம் துண்டாகிய வழிவாய்க்காலிலும் 14ம் துண்டாகியகிணற்றிலும் அதைச்சேர்ந்த நிலத்திலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலகளினுரித்தும்.

| | | |
|---|---|---|
| துரட்சித் தொகை | ரூபா | 4000 00 |
| மேலும் ரூபா 2000/- க்கு 26-3-1976 தொடக்கம் 12-6-1976 வரை 12 வீதவட்டி | ரூபா | 50 00 |
| | | 4050 00 |
| 12-6-1976 ல் கட்டப்பட்ட தொகை | ரூபா | 4000 00 |
| | | 50 00 |
| செலவு | ரூபா | 265 85 |
| மொத்தம் | ரூபா | 315 85 |

'உமாபதி'
நெல்லண்டை ரேட்,
தம்பளை,
பருத்தித்துறை,
4-10-1977 58 7-10

**R. S. இராமநாதன் J. P**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்.
Commissioner of Sales, Valuer and Auctioneer.

## என்ன இந்த நிகழ்ச்சி!

இந்தியாவென்றால் அரசியலில் நல்ல சிந்தனைக்குரிய இடம் என்று அறிஞர் மட்டுமல்ல அனைவரும் கருதி வந்தனர்.

இப்பொழுது இந்திய அரசியல் ஒரு விவகாரமாய் விட்டது.

தேசிய விடுதலைக்குச் சிறை செல்வதைச் சிறந்த சேவை யென்றும் தவம் என்றும் உலகத் தலைவர்களே ஒப்புக்கொண்டனர்.

இன்றைய சூழ்நிலையிலே அந்தச் சிறைவாசத்தின் மகிமை அற்றுப் போக, ஊழல்களுக்கும் வன் செயல்களுக்கும் தலைவர்கள் கைதாகின்றனர்.

திருமதி இந்திராகாந்தி முன் தேசிய விடுதலைப் போராட்டப் பெண் சிங்கமாயிருந்த பெருமைக்குடையவர். ஆனல் இன்று அரசியற் போட்டி அடிப்படையில் நடக்கும் துவேஷக் கொந்தளிப்பிலே சிக்குண்டு திணறுகின்ருர்.

தென் இந்தியாவிலே இதே விதமாக அரசியற் கட்சிகள் சொல்லம்பு தொடுக்கின்றனர். வேண்டுமானுற் கைது செய்யுங்கள் என்று ஒரு குழு இன்னொரு குழுவை அழைக்கும் அறைகூவல் மலிந்துவிட்டது.

திருமதி இந்திராகாந்தி கைது செய்யப்பட்டதும், நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டதும் ஒருபுறம் இந்த விவகாரம் இவ்வளவில் நின்றுவிடுமா என்பது மறுபுறம்.

## The Jaffna Co-operative Stores, Ltd.

WHEREAS Kamalambikai Magasu, Executrix of the Estate of the late Sinniah Magasu of Main Street, Point Pedro, has applied to the Directors of the abovenamed Company for the issue of a duplicate Certificate in respect of Ten (10) Ordinary Shares of Rs. 100/- each numbered :- 8857 — 8866, registered in the name of late Sinniah Magasu, the original of which is represented to have been lost or mislaid NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for duplicate Certificate the original of which will be deemed to have been cancelled.

T. SOMASUNDARAM,
Secretary.

420, Hospital Road.
Jaffna,
23rd September, 1977.
30/7/14

## ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான விளம்பரம்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை புலோலி தெற்கு, புலோலி — வாதி

வழ. இல. ஈடு. 13844 எதிராக

பிலாவடி ஒழுங்கை, புலோலி தெற்கு, புலோலி
1. ஆறுமுகம் விக்கினராசாவும்
2. பெண் இராசம்மாவும் — பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1977ம் ஞூ ஐப்பசி மீ 4 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிலுற "பன்னிருவத்தை" நி. பர 13 3/4 இதில் வடக்கரைவாசியில் கிழக்கரைவாசிக்கு ஆட்சியிலுள்ள நி. பர. 3½ இதில் கிழக்கரைவாசிக்கு நி. பர. 1, 3/4 ஒன்றே முக்கால், எல்லை கிழக்கும், வடக்கும் ஒழுங்கை மேற்கு வல்லிபுரம் செல்லமாணிக்கம் பெண் மனோன்மணிக்குடைய வாதனம் தெற்கு கனகசபாபதி திருஞானசம்பந்தமூர்த்திக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இது முழுவதும்.

| | | |
|---|---|---|
| துரட்சித் தொகை- | ரூபா | 2400 00 |
| இதில் ரூபா 500/- க்கு 26-1-1977 தொடக்கம் 7-6-1977 வரை 12 வீதவட்டி | ரூபா | 65 00 |
| ரூபா 2465/- க்கு 8-6-1977 தொடக்கம் 28-10-1977 வரை 9 வீதவட்டி | ரூபா | 82 16 |
| | | 2547 16 |

'உமாபதி''
நெல்லண்டை ரேட்டு
தம்பளை, பருத்தித்துறை.
4-10-1977. 59 7-10-

**R. S. இராமநாதன், J. P.**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர்.
ஏல விற்பனையாளர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B. - 842

S. செல்வராசாவும் பெண் தெய்வானைப்பிள்ளையும் இருவரும் மாவிட்டபுரம் — வழக்காளிகள்

எதிராக

தம்பு சிவசுப்பிரமணியமும் பெண் மனோன்மணியும் இருவரும் தெல்லிப்பழை மேற்கு, தெல்லிப்பழை. — எதிரிகள்

மல்லாகம் டிஸ்றிக் கோட்டில் இல M. B. 842 வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1977 ம் ஞூ ஐப்பசி மீ 14 ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 0-45 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 8975/- ம் 22-8-75 தொடக்கம் 7-3-77 வரைக்கும் ரூபாய் 5090/- க்கு 18% வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 612/55 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கு இறை 'பைங்கிலிட்டி'' நில. பர இரண்டும் கல்விடும் செய்பயிர் வான்பயிர்களும் வடக்குப்பக்கத்தில் இருக்கும் கிணற்றில் இதற்கு உரியபங்கும் வழமையான வாய்க்கால் வழியும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கும் மேற்கும் சுந்தரமூர்த்தி பெண் தங்கப்பிள்ளைக்கும், சச்சிதானந்தம் பெண் இராணிரத்தினத்திற்கும் உரிய ஆதனம் இதடங்கலும்.

தொல்புரம்
13-9-77 60 7-10

**இ. சோ. நரசிங்கம், J. P.**
நீதிமன்ற விற்பனையாளரும்,
மதிப்பாளரும்

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு 4143.

நா. பசுபதி கைம்பெண் அன்னம்மா சாவகச்சேரி, வடக்கு — வழக்காளி

எதிராக

கார்த்திகேசு கிருஷ்ணசாமி சாவகச்சேரி, வடக்கு. — எதிராளி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் மேற்படி 4143 -ம் இலக்க வழக்கில் திரும்பவும் எனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி பின்னால் ஆதன இடாப்பில் விவரிக்கப்படும் ஆதனம் 1977-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ந திகதி (28-10-77) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அககாணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா. 822/50 ம் மேலும் ரூபா. 500/- க்கு 9-9-1971 தொடக்கம 25-2-72 வரைக்கும் நூற்றுக்கு 12% வீதவட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு 25-2-1972 தொடக்க முழுவதும் இறுக்கும் வரை நூற்றுக்கு 5% வீத வட்டியும் செலவு ரூபா. 486/42½ சதமும் இதில தீர்வைத் தொகையில் ரூபா. 500/- ஐஞ்நூறும் கழித்து மிகுதி.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை முடிச்சான் கல்வயல் 2 பிரிவுகள் நி.பர. 7 எழு எல்லை கிழக்கு சின்னையாக் குருக்கள் கைம்பெண் அன்னம்மாவின் ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு நாகமுத்து கார்த்திகேசுவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் தெற்கு சின்னையா பெண் பொன்னம்மாவின் ஆதனம் இதடங்கலும் பதிவு F 254/191.

சாவகச்சேரி.
15-9-1977

**எஸ். வி. சதாசிவம்**
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
57 7-10.

## SAIVA JNANA DARSHANAM

(continued from page 4)

on earth. Of these, the atmabhava, (I am a being) is the most primary. In this bhava, there is a simultaneous and a secret germination of the sense of separateness and the sense of self preservation. Next to this bhava, comes Bhoktru - Bhava (I am an enjoyer) which is common to the entire range of existence beginning with the lowest manifestation of life and reaching up to the highest perfected man. In this Bhava the sentient fully realises that it cannot even for a moment live without the companionship of prakirti. The much spoken of Kartru Bhava (I am the doer) and Jnatru Bhava (I am the knower) became manifested in man only after millions of years of his existence on earth Therefore, if all beings ranging from the lowest manifestation of life the protoplasm to the highest manifestation of it the perfected saint, have a common characteristic, it is the characteristic of a Bhokta, experiencer or enjoyer. Therefore the sentient always peers out of his body as it were through the channels of his organs. His eyes must see, his ears must hear, his nose must smell, his senses must sense the outer world. This is the history of not only the small little beings inhabiting the earth but Alas!—this pravritte, this circling outwards—this running after sense pleasures has become the entire history of the most evolved, highest being called man. Poor man, not knowing his destiny and greatness, not knowing that he is his father's forgotten son, lies in bondage with his hands and feet manacled to the wheel of samsara and keeps on whirling round and round like a helplessly caught in the net of Prakriti.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

மண் ஒன்றுதான் பல நற்கல மாயிடும்,
உள்நின்ற யோனிகளெல்லாம் ஒருவனே,
கண்ஒன்றுதான் பலகாணுர், தனைக்காணு,
அண்ணலும் அவ்வண்ணம ஆகி நின்ருனே.

The eye sees various objects (with the aid of its ruler, the soul) but does not see itself (or the soul). The case of the ruler (the soul) is similar. (it sees with the aid of God, but is unable to see itself or God). The one indwelling Lord pervades all creatures even as earth is present in all pots and pans.

Hindu Organ

Friday, 7th October, 1977.

# ISMS — THEY ARE ALL INEFFECTIVE!

The world has witnessed the propounding of many isms throughout the ages but has not seen any one of them working any wonder. Marxism, Leninism, Trotskyism, Hitlerism, Stalinism Maoism — all of them were introduced by leaders who only succeeded in leaving behind their names to be perpetuated by their political philosophy. One may be tempted to mention, in this context, Gandhism but no such ism has ever been proclaimed as such. Occasional reference may have been made to this philosophy linking it with Mahatma's name But Gandhism if such a political idea is to be made available for propaganda will certainly be to the advantage of humanity as it reflects the noble aspects of human nature and inclinations.

Now that the world is in a chaotic condition and has lost all human touch it is absolutely necessary that a new political philosophy based on humanism should be propagated by the cream of society of all nations. What made Gandhiji's name synonymous with lofty politics was the fact that there was religiousness pervading his thoughts. He was not a religious propagandist but was strongly religious in his thought, deed and action.

Humanism as a philosophy is required at the present moment for the reason that man has ceased to be man by the evil influence of conflicting ideas. Achieving one's purpose by any means however mischievous and dastardly has become the propaganda of political leaders. Thus if the human race has to survive, if the civilisations of the world have to continue and if the belief of God has to be sustained then human'sm as the main principle of politics would be the only way There will be no civil strife, no war, and therefore no world agitation.

## Pioneer Social Worker in Malaysia

Mr. T. Sivapragam, S. M. S., PIK. M. B. E., was a popular figure in Malaysia for wellnigh six decades his activities being multifarious. In the religious field he was a tower of strength to all organizations. He was a Vice-President of the Thiruketheswaram Restoration Society (Malaysian Branch). His passing away is a blow to the Tamil community in Malaysia and to the general religious organizations in Sri Lanka which had received his assistance.

## The First Graduate of the Jaffna Campus

Miss Thamilarasi Sandrasekaram of the Jaffna Campus has passed the Special Degree Examination in Hindu Civilization with Second Class (upper division). She is the first Graduate of the Jaffna Campus.

# Saiva Jnana Darshanam

## Sutram I

## Relating to Worldly Existence

To all of us bound by the intellect, this worldly existence is a perpetual and rythmic movement in cycles; all the worldly processes we know of, whether the rounds of births and deaths or the movement of heavenly bodies or the succession of involution and evolution or the repetitive processes of history are glaring examples to prove the cyclic nature of this worldly existance. All we see, all we hear, all we think, are evanescent and they disappear only to appear in some other form at some other stage.

The eternal question that was raised from time to time by philosophers and religious people alike was, who knows the secret of this existence? My father in the midst of his family duties, with his characteristic filial love towards his children, would repeatedly ask me when I was in my teens Whence are these? Whither we go? Are we safe in this wayward way of life? Such questions were perhaps raised by him to awaken me to a religious way of life My father was an intensely religious person with a slight trace of mysticism in him. He was an adhyasrami — one beyond the traditional varnasrama discipline of life. He was devoted to Sivadhyanam and Sivayogam. He was a tatvagnani too. In the science of self analysis and the art of communing with God he was a unique being in this part of the world. Before his departure to the other world, at his very death bed, with tear drops in his eyes he called me to his side, and manifesting the entire warmth of the spirit in him he said unto me in a shattering and loving tone 'இந்தப் பஞ்ச இருத்தியக் கூத்தை, ஆரறிவார்'? These last words of his, awakened me to the truth that all events and all things are inseparably wedded to eternity, symbolised by the eternal and cosmic dance of Siva.

Millions of similar attempts have been made to answer the secret of this worldly existence, yet millions of times it will have to be answered again. It is not that each answer was a failure. Every answer contained a part of the truth and this truth has not reached its finality. Even the so-called religious works of revelation speak of a time when the world did not exist Are we sure of that? Are we sure that the manifested universe with its stars and planets, rivers and mountains, cities and villages, birds and animals came out of nothing. It was left to Kapila, the great father of all the philosophies of the world to demonstrate scientifically that something cannot come out of nothing. He said that the manifest comes out of the unmanifest, the gross comes out of subtle and the fine. He said that this world with its infinite variety of creation came out of a fine subtle substratum called prakriti. This prakriti manifested in its gross form is the samsarachakram of ours with all its universal, cosmic, moral, mental and physical f rces which are constructive as well as destructive. Construction is coming back to the effect and destruction is going back to the cause. Take this pot, it is an effect and it had its cause and this cause is present in its form. A certain amount of material called clay together with the force in the hands of the potter are the causes, the material and the instrumental which combined produced this form called the pot. The force which was in the hands of the potter is present in the pot as the power of adhesion without which the particles would fall apart and the clay mater.al is also present in the pot. The pot is only a manifestation of these fine causes in a new shape. If the pot is broken to pieces, the force that was present in the form of adhesion will go back and join its elemental state and the particles of clay will remain the same until they take new forms. Thus we find that the effect is never different from the cause. Take the cause of a tree. The seed produces the tree. The tree produces the seed which again comes up to another tree and so on and on. So with all the lives, and so with all existence that we can see, feel, hear or imagine. So if we take this universe — this cosmos — and resolve it into its causes, we are confronted with three such causes, all existing in their fine and super fine forms: (1) the material cause, the finest of all substances called prakriti 2) the instrumental cause, an unseen divine power that operates as time and its sequence, (3) the efficient cause, the divinity that wields the power.

The universe is not a chaos but a cosmos. Everything manifested seems to be related to everything else, and the whole appears to be well arranged, co-ordinated and organised into a system each object having a definite mathematical co-ordinate and function in respect to the entire universe and each being subject to a particular kind of behaviour. The flowering plants, the rising sun, the Himalayan mountains the gushing rivers, the infinite ocean, the blue sky, the starry heavens are all awe-inspiring, sublime and beautiful and man has been enj ying it since his appearance on earth This sentient being called man with a twinkling of intelligence in him has manifested several faculties and bhavas of his own since his appearance

(continued on page 3)

Our readers will remember several series of instructive articles that appeared in the *Hindu Organ* many years ago written by "a Science Graduate" — Shri A. Visvanathan, author of a number of books on Saiva Siddhantha.

Now we commend a new series of articles to our readers by another Science Graduate — Shri M. Gnanapiragasam, emeritus Principal of Parameshwara College and a disciple of Shri S. Sivapathasundaram.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, October 7, 1977.

Editor-in-Chief B. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org